**செய்தி வெளியீடு எண் : 141** **நாள்: 20.01.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை 20.01.2022**

இந்துசமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கக்கூடிய அனைவரையும் வரவேற்புரை ஆற்றி மகிழ்ந்திருக்கக்கூடிய முதன்மைச் செயலாளர் திரு.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களே!

இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்தக் குழுவின் துணைத் தலைவர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களே!

இந்தக் குழுவில் உறுப்பினர்களாக பொறுப்பேற்றுக் கொண்டு இந்தத் துறைக்கும், அரசுக்கும் பல்வேறு சிறப்புகளைத் தேடித் தருவதற்காக உறுதி எடுத்திருக்கக்கூடிய தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களே!

மதிப்பிற்குரிய திரு.சுகி சிவம் அவர்களே!

திரு.தரணிபதி இராஜ்குமார் அவர்களே!

திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்களே!

ஸ்ரீமத் வராக மகாதேசிகன் அவர்களே!

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களே!

முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களே!

நீதியரசர் திரு.டி.மதிவாணன் அவர்களே!

திரு.கருமுத்து தி.கண்ணன் அவர்களே!

முனைவர் சக்திவேல் முருகனார் அவர்களே!

திரு.ந.சுப்பிரமணி அவர்களே!

திருமதி ஸ்ரீமதி சிவசங்கர் அவர்களே!

நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து முதலமைச்சர் என்கின்ற முறையில், அரசினுடைய துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள் கூட்டத்தில் தான் நான் தொடர்ந்து பங்கேற்று வந்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படி பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் இன்று உங்களைச் சந்திக்கக்கூடிய, உங்கள் கருத்துக்களைக் கேட்கக்கூடிய, உங்களுடன் கலந்தாய்வு நடத்தக்கூடிய சிறப்பான வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது.

குறிப்பாக, திருக்கோயில்களின் வளர்ச்சிக்காக - தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தின்படி மாநில அளவில் ஒரு ஆலோசனைக்குழு இந்தத் துறைக்கு அமைக்கப்பட வேண்டும். ஆனால், இந்தக் குழு 2015-க்குப் பிறகு அமைக்கப்படவில்லை என்ற தகவல். இந்தத் தகவல் என் கவனத்திற்கு நம்முடைய துறையின் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த நேரத்தில், உடனடியாக அதற்கான பணிகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று நான் அவரிடத்தில் வலியுறுத்தி, வற்புறுத்திச் சொன்னேன். அந்த அடிப்படையில் தான் கடந்த 21-6-2021 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், சட்டமன்றத்தில் அவர் தாக்கல் செய்த கவர்னர் உரையில், இப்படி ஒரு குழு அமைக்கப்படும் என்று அவருடைய அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில், 6 ஆண்டு காலமாக நியமிக்கப்படாத இந்தக் குழு – 13 அலுவல் சாரா உறுப்பினர்களுடன் அமைக்கப்பட்டு அதற்குப் பின்னால் இந்தக் கூட்டம் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நீங்கள் எல்லாம் அரசியல் தொடர்பில்லாத - ஆன்மீகத்தில் நாட்டமுள்ளவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும், ஏன் பொதுநலனில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் நீங்கள். உங்களை எல்லாம் இக்குழுவில் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமித்துள்ளதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மகிழ்ச்சியடைகிற நேரத்தில் நீங்கள் இந்தக் குழுவில் இடம்பெற வேண்டும் என்று உங்களிடத்தில் கேட்ட நேரத்தில் நீங்களும் மனமுவந்து ஒப்புக்கொண்டு இந்தக் குழுவிற்கு பெருமை சேர்த்துத் தந்திருக்கிறீர்கள், இந்த அரசுக்கும் பெருமை சேர்த்துத் தந்திருக்கிறீர்கள். அதற்காக நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அனைவரும் மகிழ்ச்சிகரமாக இருக்கின்ற இந்த வேளையில், கழக அரசு இத்துறையில் கடந்த 8 மாதத்தில் செய்திருக்கக்கூடிய சாதனைகளை ஆன்மீகத்தில் நாட்டம் உள்ள நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆனாலும் ஆட்சிக்கு தலைவர் என்ற முறையில் - அவற்றை எல்லாம் உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது, அப்படி பகிர்ந்து கொள்வதை என்னுடைய கடமையாகவும் நான் கருதுகிறேன்.

725 திருக்கோயில்களுக்கு திருப்பணி வழங்க அனுமதி.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தில் 58 அர்ச்சகர்கள் நியமனம்.

அன்னைத் தமிழில் அர்ச்சனை.

ஒருகால பூசைத் திட்டத்திற்கு 1 லட்சமாக இருந்த நிதி 2 லட்சமாக உயர்வு.

அத்திட்டத்தில் உள்ள அர்ச்சகர்களுக்கு முதல் முறையாக - ஊக்கத் தொகையாக 1000 ரூபாய் வழங்குதல்.

10 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள்.

திருத்தணி, சமயபுரம், திருச்செந்தூர் கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம்.

ஆயிரத்து 689 கோடி ரூபாய் மதிப்புள்ள திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு.

10 ஆண்டுகளுக்கும் மேல் ஓடாமல் இருந்த சமயபுரம், திருத்தணி கோயில் தங்கரதங்கள் உலா வர நடவடிக்கை.

திருக்கோயில்களில் உள்ள 65 தங்கத் தேர், 49 வெள்ளித் தேர்களை முறையாக பராமரித்து உலா வருவதற்கான நடவடிக்கை.

100 திருக்கோயில்களில் உள்ள நந்தவனங்கள் மேம்படுத்துதல், திருத்தேர் திருப்பணி, திருக்குளப் பராமரிப்பு.

கொரோனா பேரிடர் காலத்தில் திருக்கோயில் அர்ச்சகர்கள், ஒருகால பூசை திட்டத்தில் உள்ள அர்ச்சகர்களுக்கு 15 வகையான உணவுப் பொருட்கள் மற்றும் 4000 ரூபாய் நிதியுதவி.

திருக்கோயில்களில் பணியாற்றி- ஓய்வு பெற்ற அர்ச்சகர், ஓதுவார், இசை கலைஞர் ஆகியோருக்கு 1000 ரூபாயாக இருந்த ஓய்வூதியம் 3000 ஆக உயர்வு.

கிராமக் கோயிலில் பணியாற்றி ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியம் 3 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரமாக உயர்வு.

அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல் அகவிலைப்படி உயர்வு, 2000 ரூபாய் பொங்கல் கருணைத் தொகை.

திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு புத்தாடை, பணியாளர்களுக்கு சீருடை.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான 3.6.2021 அன்று இந்த ஆணையர் அலுவலகத்தில் தல மரக்கன்று நடும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, இதுவரை திருக்கோயில்களில் 68 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்பு செலவுக்கு ஒதுக்கிய நிதி 3 கோடியை 6 கோடியாக உயர்த்தி வழங்கியது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 225 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கு 1 கோடி ரூபாய் என்பதை 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியது.

10 கல்லூரிகள் துவங்குவதாக அறிவிக்கப்பட்டு, 4 கல்லூரிகள் ஏற்கனவே தொடங்கியது. இதனால் 500 மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் 1 லட்சம் நிதி 2 லட்சமாக உயர்வு.

கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணிக்காக 1 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்த நிதி 2 லட்சம் ரூபாயாக உயர்வு.

அன்னதானத் திட்டத்தின் மூலம் கொரோனா காலத்தில் - இதுவரை 44 லட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் சொல்வதற்கு பல சாதனைகள் இருக்கின்றன. ஆனால் குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் தான் உங்களிடம் நான் பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

திருக்கோயில்களின் பணிகளை மேலும் செம்மையாக எடுத்துச் செல்வதற்கு உங்களின் ஆலோசனைகளை எல்லாம் நிச்சயம் இந்த அரசுக்கு வேண்டும் என்ற அந்த நோக்கத்தில் தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது, அந்தக் குழுவின் சார்பில் தான் இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

திருக்கோயில்கள் வளர்ச்சிப் பணியில் ஆலோசனைக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்குமான பொருண்மைகள் குறித்து இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

- திருக்கோயில்களின் தல வரலாறு மற்றும் தல புராணத்தை தவிர திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களால் வெளியிடப்பட்ட அரிய வகை புத்தகங்களை மறு பதிப்பாக்கம் செய்தல், மின்னணுமயமாக்குதல் மற்றும் அப்புத்தகங்களை திருக்கோயில்கள் மற்றும் திருமடங்கள் வாயிலாக பக்தர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்தல்.

· தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

· ஸ்ரீமத் வராக மகாதேசிகன்

- திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களால் வெளியிடப்பட்ட அரிய புத்தகங்களை மறுபதிப்பாக்கம் செய்தல், மின்னனுமயமாக்குதல் மற்றும் அப்புத்தகங்களை திருக்கோயில்கள்/ திருமடங்கள் வாயிலாக பக்தர்களுக்கு விற்பனை செய்தல்

· ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

- திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படும் ஓதுவார்கள் பயிற்சிப் பள்ளிகள், அர்ச்சகர்கள் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் இசைப் பள்ளிகளின் தரம் மற்றும் பாடத்திட்டத்தினை மேம்படுத்துதல், மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் அவர்களுக்கான வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்துதல்.

· முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்.

· திரு. கருமுத்து தி.கண்ணன்

- தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டம் 1959ல் உள்ள பிரிவுகளை தற்போதைய நடைமுறைக்கு ஏற்றவாறு திருத்தி அமைத்தல்

· நீதியரசர் டி.மதிவாணன் (ஓய்வு)

- திருக்கோயில்களின் ஆகமங்களை பக்தர்கள் அறிந்து பயன்பெறும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுதல்,

· முது முனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார்

· திரு. சுகி.சிவம்

- திருக்கோயில்களில் ஆன்மீகச் சொற்பொழிவு, ஆன்மீக வகுப்புகள் மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகள் நடத்துதல்.

· திருமதி. தேச மங்கையர்க்கரசி

·திரு. ந.இராமசுப்பிரமணியன்

- திருக்கோயில்களின் சார்பில் பக்தர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சேவைகளையும் கணினிமயமாக்குதல்.

· திருமதி. ஸ்ரீமதி சிவசங்கர்

·திரு. தரணிபதி இராஜ்குமார்

- திருக்கோயில்களின் நிதி மேலாண்மையினை மேம்படுத்துதல் மற்றும் கணினிமயமாக்குதல்

· திரு. மல்லிகார்ஜுன் சந்தானகிருஷ்ணன்

உங்களுடைய ஆலோசனையைப் பெற்று அதற்கேற்ற வகையில் அரசின் சார்பில், இந்தத் துறையின் சார்பில் செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்களும், திரு.சு.கி.சிவம் அவர்களும், திரு.தரணிபதி இராஜ்குமார் அவர்களும், திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்களும் இங்கு பேசும்போது பல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக, இந்தத் துறையின் அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்கள் சொன்னது போல, அவைகள் எல்லாம் நிச்சயமாக, படிப்படியாக, உறுதியாக நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, கடந்த 8 மாதங்களில் அனைவரும் போற்றத்தக்க வகையில், இன்னும் பெருமையாக சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில் இருக்கின்ற அந்தப் புகழ்ச்சியைவிட மற்ற மாநிலங்கள், தமிழ்நாட்டின் அரசை பாராட்டக்கூடிய அளவிற்கு, பல வெளிநாடுகள் பாராட்டக்கூடிய அளவிற்கு ஊடகங்களில் செய்தி வந்து கொண்டிருக்கின்றன, நீங்களும் பார்த்திருப்பீர்கள். அது உள்ளபடியே பெருமை தான். நான் இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறேன், இந்தியாவில் இருக்கக்கூடிய நான்கைந்து முதலமைச்சர்களை ஒரு கணிப்பு நடத்தி ஒரு ரிசல்ட் வெளியிட்டார்கள். அதில் எனக்கு முதலிடம் கிடைத்தது. அது எனக்குப் பெருமை தான். இந்தியாவில் நம்பர் 1 முதலமைச்சர் என்று சொல்வதை விட, நம்பர் 1 தமிழ்நாடு என்று சொல்வது தான் எனக்குப் பெருமை. அதை நோக்கித் தான் நாம் போய்க் கொண்டிருக்கிறோம். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கப் போகிறது.

இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கும் நீங்கள் சொல்லியிருக்கும் யோசனைகள், ஆலோசனைகள், அதனால் இந்தத் துறையின் செயல்பாடு நிச்சயமாக மிளிரப் போகிறது. இந்தக் குழுவின் நோக்கம் சமய நிறுவனங்களில் பொதுமக்களுக்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவது, அது மட்டுமன்றி, மலைக் கோயில்களுக்கு செல்லும் பக்தர்களுக்கு கம்பிவட ஊர்தி ஏற்பாடு செய்தல், நந்தவனங்களை மேம்படுத்துதல், திருக்குளம் பராமரிப்பு, திருத்தேர் பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து தங்கள் கருத்துக்களை தயக்கமின்றி, சுதந்திரமாக இந்தத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நீங்கள் சொல்லலாம், அலுவலர்களிடத்தில் சொல்லலாம். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், என்னையும் நேரடியாக சந்தித்து சொல்லலாம், அதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. எந்த நேரத்திலும் என்னை சந்திப்பதற்கான வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

நீங்கள் அனைவரும் இடம்பெற்றிருக்கும் இந்தக் குழுவின் செயல்பாடு இந்து சமய அறநிலையத் துறையை மேலும் மிளிர வைக்கும், திருக்கோயில்கள் சிறப்படையும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக வந்துவிட்டது, உங்களைப் பார்த்தவுடனேயே வந்துவிட்டது. பொதுமக்கள், அதற்கு முன் இல்லாத அளவிற்கு அனைத்து வசதிகளையும் திருக்கோயில்கள் மூலமாக பெற வேண்டும் என்று இந்தத் துறையின் மூலமாக பெறுவார்கள் என்று நம்புகிறேன். மீண்டும் நான் இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கக்கூடிய உங்களுக்கு, அரசின் சார்பிலும், இந்தத் துறையின் சார்பிலும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**